குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.281/2022

அ.சா.2

2024–ம் ஆண்டு டிசம்பர் 18–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இருசன் | ஜாதி | |
| தந்தை பெயர் | குப்புசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.04 மணி,

Accused Siva absent. Petition U/s.317 Cr.P.C filed and allowed. Advocate Mrs.R.Divya present for Advocate Mr.Thirumugam for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான், இரும்பாலையில் குடியிருந்து, கயிறு திரிக்கும் தொழில் செய்து வருகிறேன். சுமார் 4 1/2 வருடங்களுக்கு முன்பு, இரவு 07.00 – 07.30 மணியளவில், சேலம் – தாரமங்கலம் செல்லும் சாலையில், அழகுசமுத்திரம் செல்லும் சாலையின் அருகே டீக்கடையில் இருந்தேன். சேலம் பக்கமிருந்து தாரமங்கலம் நோக்கி வந்த லாரி டீக்கடை, அம்மன் தியேட்டர் அருகே இடதுபக்கமாக நின்றது. அப்போது, சேலம் பக்கமிருந்து தாரமங்கலம் நோக்கி பிரவீன் குமார் பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்தார். அப்போது, அவருக்கு எதிரே வாகனம் வந்ததால், பிரவீன் குமார் இடதுபுறமாக ஒதுங்கியபோது, நின்றிருந்த லாரியின் இண்டிகேட்டர் எதுவும் போடாமல் நின்றிருந்ததால், அதன் பின்னால் மோதிவிட்டார்.

2. நான், அருகில் சென்று பார்த்தபோது, அவருக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டிருந்தது. நான், அவரது அப்பா அ.சா.1 கணேசன் என்பவருக்கு தகவல் சொன்னேன். கணேசன் சம்பவ இடத்திற்கு வந்து, ஆம்புலன்ஸ் மூலமாக பிரவீன்

குமாரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். பிரவீன் குமார் இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

3. விபத்து ஏற்படுத்திய லாரியின் பதிவெண் எனக்கு தெரியாது. அதன் ஓட்டுநர் குறித்த விபரம் எனக்கு தெரியாது. மறுநாள் போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.10 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.